LouisSaveinDupuisJournalofMultidisciplinaryResearch2024,3: 5-12
Doi.: 10.21839/lsdjmr.2024.v3.132

Research Article

# அகநானூற்றில் துணைமாந்தர்கள்

**க. நவநிதி**

**இளங்கலைத்தமிழ், மூன்றாம்ஆண்டு**

**இமாக்குலேட்மகளிர்கல்லூரி, கடலூர்.**

Email:knavanithi1234@gmail.com

**கைபேசி எண்:** 84380 35103

**முனைவர்த.தீபா**

**ஏம்.எ., எம்.பில்., பி.எச்.டி., நெட்.,**

**துறைத்தலைவர், தமிழ்த்துறை**

**இமாக்குலேட்மகளிர்கல்லூரி, கடலூர்.**

Email:deepavishruth@gmail.com

**கைபேசி எண்:** 82208 53671

**ஆய்வுச்சுருக்கம்**

அகத்திணை சார்ந்த 400 பாடல்களின் தொகுப்பு என்பதனால் இதனை அகநானூறு என்று கூறுகின்றோம். இதில் அடங்கியுள்ள பாடல்கள் பல்வேறு காலங்களில் வாழ்ந்த புலவர்கள் பலரால் பாடிய பாடல்கள் ஆகும் எட்டுத்தொகை நூல்கள் அகம் என்று பெயரால் அமைந்த அகம் சார்ந்தநூல் அகநானூறு உள்ளத்தில் ஏற்படும் உணர்ச்சியே அகமாகும் இவற்றில் தலைமகளின் நெருங்கிய உறவு முறையாக உள்ள தோழிநற்றாய் செவிலி போன்ற துணைமாந்தர்களின் உளவியல் சிந்தனையையும் நற்றாய்க்கும செவிலிக்கும் தலைவியின் மீதுள்ள அன்பு அச்சம் பொறுப்பு இவ்வாறு பல நிலைகளில் இவர்களின் செயல் பாட்டினையும் காணலாம். களவு கற்பு என்ற இரு நிலைகளிலும் தோழி செவிலித்தாய் உறவு என்பது இன்றியமையாத ஒன்றாக அகவாழ்வில் உள்ளது தலைவியின் உடன் போக்கிலும் இவர்களின் பங்கு முக்கியமானது ஆகும். அகநானூற்றில் துணைமாந்தர்களின் பயனால் தலைவியின் வாழ்வில் ஏற்படும் மாற்றங்களை எடுத்துரைப்பது இவ்வாழ்வு நோக்கமாக உள்ளது.

**திறவுச்சொற்கள்:** தலைமகள், செவிலித்தாய், நற்றாய், பகல்கனவு, உளவியல் சிந்தனை, சமூக நிலைப்பாடு, உணர்வு ஒதுக்கம், கண்டோர்நிலை, உழையரின்செயல்.

## முன்னுரை

ஓர் இனத்தின் பண்பாட்டு வளர்ச்சி அவ்வினமக்களின் செழுமையான வாழ்வியலை அளவு கோலாகக்கொண்டு மதிப்பிடப்படும். சங்க கால மக்களின் வாழ்வியல் விழுமியங்கள் இலக்கியங்களின் வெளிப்பாடாக அமைகின்றன. அக வாழ்க்கையின் அங்கமாகிய தலைவன் தலைவி இருவரும்

தலைமை மாந்தர்கள் எனவும், இம்மாந்தர்களின் பண்புகள் வெளிப்படுவதற்கு உதவுகின்ற பாத்திரமாகத்துனைமாந்தர் அல்லது பிறமாந்தர்கள் படைக்கப் பட்டுள்ளனர். படைப்பாளியின் குறிக்கோளை நிறைவேற்றப் படைக்கப்பட்ட பாத்திரமாகியதுணை மாந்தாகளின் பண்புகள் இன்றியமையாதளவாக அமைகின்றன.

அகநானூற்றில் துணைமாந்தர்கள் இலக்கிய போக்கிற்கு ஏற்றவகையில் படைக்கப்பட்டுள்ளனர். உடல் இயங்குவதற்கு உயிர் இயக்கம் தேவைப்படுவது போல அக தலைமை மாந்தர்களின் உயர்வுக்கும், செயலுக்கும் துணைமாந்தர்கள் நேரடியாகவும் மறை முகமாகவும் துணைபுரிகின்றனர். தலைமை மாந்தர்களுக்கு த்துணையாக இருக்கும் துணைமாந்தர்கள் தலைமக்களுடன் உறவுடையோர், தலைமக்களுடன் இருவகையாகப்பகுக் கப்பட்டுள்ளனர்.

## தலைமக்களுடன் உறவுடையோர்

அகநானூற்றில் தலைமை மாந்தர்களுடன் நெருங்கிய உறவுடையவர்களாகத்தோழி, நற்றாய், செவிலி, பரத்தை போன்றோர் திகழ்கின்றார். தலைவன் தலைவி அகவாழ்க்கையின் போக்கில் மாறுதலை ஏற்படுத்தி மாற்றம் செய்வதற்கான வெளிப்படை உளவியல் ஊக்கியாக தோழி செயல்படுகிறாள். தோழியே தலைமைமாந்தர்களின் நெருங்கிய உறவுடையவர்களுள் முதன்மையான வளாக கருதப்படுகின்றாள்.

“தலைவன் தலைவியருடன் உடன் வரைந்தோ சந்தித்தோ அவர்கள் வாழ்க்கையில் திருப்பங்களாக பயன்படாமல் அவர்கட்கு உதவியாகவோ, அவர்கட்கு விளக்கமாகவோ அமையும் பாத்திரங்களை ஒட்டிய பாத்திரங்கள் எனக் கூறலாம்”01 என்று துணை மாந்தர்கள் பற்றிகா. மீனாட்சி சுந்தரம் கூறுகிறார். ஜசிலம்பில் துணை மாந்தர்ப-12ஸ. இக்கருத்தடிப்படையில் தலைமை மாந்தர்களின் பண்புகளைப் புலப்படுத்தும் ஒட்டிய உறவுடைய பாத்திரமாக நற்றாய், செவிலி, பரத்தை போன்ற மூவரையும் குறிப்பிடலாம்.

## நற்றாய்விளக்கம்

தலைவியைப் பெற்றெடுத்ததாய் நற்றாய் ஆவாள். அக இலக்கியங்களில் இவள் கூற்றுகள் மிகக் குறைவாககாணப் பெறுகின்றன. நற்றாய்க்கும், செவிலிக்கும் புலனெறி வழக்கில் வேறுபாடின்மையால் புலவர்கள், பாடல்களின் துறையில் “தாய்” எனவும் 'செவிலி” எனவும் மயக்கங்கொண்டு கூறியுள்ளனர். இருப்பினும் செவிலித் தாயிடமிருந்து பெற்றதாயைப் பிரித்துக் கூறும் நோக்கத்துடன் 'நல்”என்ற அடை மொழியுடன் நற்றாய் என அறிஞர்கள் அழைத்தனர். தொல்காப்பியம் கூற்றுக்குரியோரைக் குறிப்பிடும் போது நற்றாயைக் குறிக்கவில்லை எனினும், கற்பின் கண்வரும் வாயில்கள் பன்னிருவருள்

தொல்காப்பியர் தாய் என்று குறிப்பிடுகின்றார். நற்றாய் கூற்றுக்குரிய மரபினை,

**“கிழவன்தன் னொடுங்கிழத்திதன்னொடும்**

**நற்றாய் கூறல் முற்றத் தோன்றாது.**”02 (**தொல். பொருள். மெய்.** 493) என்ற நூற்பாவாயிலாகப்புலப்படுத்துகிறார.

எட்டுத்தொகை அகநூல்களில் நற்றாய் கூற்றுப்பாடல்கள் முப்பத்தாறு ஆகும். அகநானூற்றில் ஒன்பது பாடல்கள் நற்றாய் கூற்றமைந்த பாடல்களாக உள்ளன.

தலைவி தலைவனுடன் உடன் போக்கு சென்ற சூழலில், தெய்வம், தோழி, கண்டோர் போன்றோரிடம் நற்றாய் கூற்று நிகழ்த்துகின்றாள். மேலும் தலைவி சென்றவழி பற்றி அச்சம், தலைவியின் இயல்புகளை நினைந்து புலம்புவதாக அகநானூற்றில் நற்றாய் கூற்று அமைந்துள்ளது.

**நற்றாயின் உளச் செயல்பாடுகள்**

அகநானூற்றில் நற்றாயின் உளச்செயல்கள், தலைவியின் மீது கொண்ட அக்கறை, அன்பு, வருத்தம், அச்சம், வெறுப்புபோன்றகூறுகளைவெளிப்படையாகமற்றும்குறிப்பாகத்தெரிவிக்கின்றன.

நற்றாய்தன்மகள்வளர்ந்தசூழல்பற்றிக்கூறுகையில்,

**“ஓரை ஆய மொடுபந்து சிறிது எறியினும்**

**வாராயோ என்று ஏத்திப்பேர் இலைப்**

… … … … … … … …

**மறைந்து அமைந்து இரா அநெஞ்சம் நோவேன்**”03 **அகம்.** 217(2-11)

எனக் கூறுகின்றாள். தன்மகளை வளர்த்த அனுபவமாக நற்றாய், என் அருமைமகள் இளம் பருவத்தில் இந்தப் பெரிய வீட்டில் தோழிமாருடன் பந்து விளையாடுவாள். சிறிது நேரம் விளையாடினாலும் மனம் பொறாது அவளை அழைத்துப் பாராட்டி, வெள்ளிக் கிண்ணத்தில் பாலைவைத்துக் கொண்டு அவளை உண் பிக்க முயல்வேன், என்றும் என்பங்கு உண்டு விட்டாய், அவள் தந்தைக்கும் உண்க என இரந்து உணவு ஊட்டி செல்லமாகத் தலைவியை வளர்த்த விதம் எடுத்துரைக்கின்றாள்.

தனக்கு அறியாத அறநெறி இல்லாதவனோடு தலைவி தன்னுடைய மடப்பக்குணமும், அழகும் குன்றுமாறு வருத்தமடைவதாகப் புலம்புகிறாள். நடந்து செல்வதால் தலைவி நற்றாயின் விருப்பபடி செல்லமகளாக வளர்க்கப்பட்டுள்ளாள். தலைவனுடன் உடன்போக்கு மேற்கொண்டநிலையில், தான் எப்படியெல்லாம் வளர்த்தோம், வளர்க்க இருந்தோம் அறநெறி இல்லாத ஒருவனுடன் துன்பத்தை அடைவதற்குத் தலைவி சென்று விட்டாளே என்று எண்ணும் போது நற்றாய் மனமுறிவு அடைகின்றாள் என்பதை இப்பாடல் வழிஉணர முடிகின்றது.

**செவிலித்தாய்**

தலைமக்களின் வாழ்வில் பெரும்பங்குவகித்து அவர்களுக்காகத் தொண்டாற்றும் ஒருகுடும்பத்தில் பிறந்த இருதலை முறையினராகிய செவிலியும், தோழியும் சிறப்பைப் பெறுகின்றனர்.

தலைவியைப் பெற்றவள் நற்றாய் என்றும், வளர்ப்பவள் செவிலித்தாய் எனவும் அக இலக்கியங்கள் சுட்டுகின்றன. தலைவியின் வளர்ப்பிலும், இல்லறவாழ்விலும் நற்றாய். சேவிலி என இருவருமே பொறுப்புடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

தொல்காப்பியர்களவியல், கற்பியல் ஆகிய இரு இடங்களின் வாயிலாகச்செவிலியின் சிறப்பினை எடுத்துரைக்கின்றார்.

**“ஆய்பெருஞ் சிறப்பின் அருமறைகிளத்தலின்**

**தாயெனப்படுவாள்**

**செவிலியாகும்”04 தொல். பொருள், களவு**-112. என்று பெரிய சிறப்புகளை உடைய அறிதற்குரிய மறைப் பொருள்யாவற்றையும் கூறும் பொறுப்புடைய தாய் செவிலி எனக்கூறுகின்றார். அக இலக்கியங்களில் கூற்று நிகழ்த்தும் மரபினை,

**“கழிவினும் நிகழ்வினும் எதிர்வினும் வழிகொள்**

**நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்**

**செவிலிக்குரிய ஆகும் என்பா**”05 **தொல். பொருள், களவு**-12

இறந்தகாலம், நிகழ், எதிர் என மூன்று காலங்களிலும் நல்லவற்றை உரைப்பதும், அல்லவற்றை கடிதலும் செவிலியின் கடமையாகத் தொல்காப்பியர் கூறுகின்றார். செவிலிந்தாய் களவுகற்பு என்ற இருநிலைகளில் தன் கூற்றினை வெளிப்படுத்துகிறாள்.

**செவிலி உள்ளம் முறிவடைதல்**

தலைவி உடன் போக்கு மேற்கொண்டாள் எனத் செவிலி வருந்தி கூறும் பொழுது.

“**திதலை அல்குல் குறுமகள் அவனோடு**

**சென்றுபிறள் ஆகிய அளவை, என்றும்**

… … … … …

**உளர் இழந்தன்று, தன்வீழ்வு உறுபொருளே**"06 **அகம்** 189 (9-15)

தேமல் படர்ந்த இடைப்பகுதியினை உடையதன் மகள் அவள் காதலனோடு உடன் போக்காகச் சென்று தன்னையும், தன் தோழியரையும், இவ்வூர்மக்களையும் மறந்து அந்நியமாகி விட்டாள். இந்நிலையில் யான் அவளை திசை யெல்லாம் தேடி அலைந்து திரும்பி இல்லத்தில் மயங்குற்றேன்.

எனினும் இவ்வூர்மக்கள் தமக்கு விருப்பமான ஒன்றை தொலைத்து விட்டு ஏங்கும் இழப்பை விடதலைவியைப் பிரிந்த என்னுடைய இழப்பு பெரிது எனக் கூறுகின்றாள்.

தலைவியின் நல்வாழ்வைக் குறிக்கோளாக கொண்ட செவிலித்தாய், உடன் போக்கிற்குச் சென்ற தலைவியைத் தேடி அலைந்து ஒன்றும் செய்வதறியாமல் தலைவியை இழந்து தான் பெரிய இழப்பினை பெற்றிருப்பதாக

உளம்முறிவடைந்து உரைக்கின்ற பாங்கினை அறிய முடிகின்றது.

செவிலியின் இறுக்க நிலைப்பாடு பின்வரும் அகநானூற்று பாடல் காணப்படுகின்றது.

**“நோகாயானே, நோதகும் உள்ளம்,**

**அம்தீம்கிளவி ஆயமொடுகெழீஇ,**

………………………………

**நல் அடிக்கு அமைந்த அல்ல, மெல்இயல்**

**வல்லுநள்கொல்லோதானோ"07**

**அகம்:** 153 (1-6, 12-13) என்ற அடிகளில் செவிலித்தாய், தன்மகள் உடலின் மென்மையால் இரங்கத்தக்கவள், பந்து விளையடினாலும் மளம்வருந்துவாள் அத்தகையவள் பசுமை இல்லாத, பருக நீரும் கிடைக்கா அரிய வழியில் உடன் போக்குச் சென்றாள். மென்மையான அவளை அழைத்துச் சென்ற தலைவன் தன் இன்சொல் மற்றும் அணைப்பினால் தன் வயப்படுத்தி கொண்ட கொடுமையுடையவன். அவனுடன் சென்ற பாலை வழியில் அவள் விரைந்து நடக்க முடியுமா, முடியாதோ என்ற எண்ணத்தில் தான் உள்ளம் வருந்துவதாகக் கூறுகிறாள்.

இப்பாடலில் வழிபற்றிய அச்சவுணர்வும், மென்மையுடைய தலைவியைப் பொய் சொல்லி அழைத்துச் சென்ற தலைவனைக் கொடுமையுடையவன் எனக்கூறும் பொழுது அவளின் சினஉணர்வையும், தலைவி செயல்பாடு கண்டு மனமுடைந்த செவிலியின் மனம் இறுக்க மடைந்து காணப்படுகின்ற நிலையைப்பாடல் வழி அறிய முடிகின்றது.

**சமூகநிலை முறிவு**

உள முறிவு செயல் பாட்டின் ஒரு பகுதியாகச் சமூகநிலை முறிவு காணப்படுகின்றது. சமுதாயத்தில் மதிப்பிற்குரிய இடத்தைப் பெறுவதும், தன்னிலை இழக்காமல் போற்றுதலும் மனிதனின் விருப்பமாக அமைகின்றன.

இதனை உளவியலார், "மனிதர்களிடம்நிலவும்அன்பிற்கும்பிறர்நலவிழைவிற்கும்பிறரதுதுலங்கலைப்பெறவேண்டும்என்னும்விருப்பமேசமூகநிலைமுறிவுஅடிப்படை.18 என்று வரையறை செய்வதாகது. சிவராஜ் கூறுகின்றார். அகநானூற்றில் செவிலி தலைவன் தலைவி அகவொழுக்கம் மற்றவர்களால் அலர் தூற்றும் நிலையை அடைந்தமையினைக் கூற்றில் வெளிப்படுத்துகின்றாள்.

**“அலர் வினை மேவல் அம்பல் பெண்டிர்**

… … … … … … …

**யான்இவ்வறுமனைஒழியத்தானோ”08 அகம்:** 203 (3-1) என்ற அடிகளில், செவிலித்தாய், பழி கூறுவதைத் தொழிலாக உடைய பெண்டிர், தலைவியின் நடத்தைப் பற்றிப் பலவாறு அலர் கூறினும், தலைவியிடம்கேட்டால்நாணுவாள்எனமறைத்தேன். அதனால் உருவாகும் துன்பத்தை இன்று உணர்வதாகக் கூறுகின்றாள். பெண்கள் தலைவியை அலர், அம்பல் தூற்றும் பொழுது அவை குறித்து தலைவியிடம் பேசாமல் இன்று தலைவியைப்பிரிந்து துன்புறுவதாகக் கூறும் செவிலியின் கூற்றில் சமுதாய நிலையில்

உளமுறிவு அடைகின்ற மனநிலையை உணர முடிகின்றது.

**பகற்கனவு**

வாழ்வின் நிகழ்வுகளை ஏற்க இயலாத சூழலில் தன்னிச்சையான கற்பனைச் செயல் பாட்டில் உள்ளம் ஈடுபடுவது பகற்கனவு எனப்படுகின்றது. அகமாந்தர்களில் தலைவன், தலைவி, தோழி. செவிலி, நற்றாய், பரத்தை ஆகிய அறுவரின் கூற்றுகளில் இவ்வுளவியல் உத்தி மேலோங்கிக் காணப்படுகின்றன.

“தூக்கத்தில் திகழ்வதுகனவாகவும், விழிப்பில் நிகழ்வது பகற்கனவாகவும் உள்ளது. இரண்டிற்கும்பெரியவேறுபாடுகள்இல்லைஎன்பதைஉளவியல்அறிஞர்யங்குறித்துள்ளார்”09(மு.நூ.ப.108) எனத் உளவியல் அறிஞர் தரும் விளக்கத்தைது. சிவராஜ் அவர்கள் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அகநானூற்றுப்பாடல்களில் உடன் போக்கில் தலைவனொடு சென்று விட்டமகளுக்கு இடைவழியில் நிகழ்வன பற்றிநற்றாயும் செவிலியும் எண்ணிப்பார்க்கும் பாடல்கள் பகற்கனவு போன்ற உளவியல் சிந்தனைத் தொடர்கள் மிகுதியாக உள்ளன.

**“மடமயில் அன்ன என்நடை மெலிபேதை**

… … … … … …

**கேட்கு நல்கொள்? எனக்கழுலும் என்நெஞ்சோ**”10 **அகம்**: 63 (15-19)

செவிலித்தாய் தன்மகள் அச்சம் மிக்ககாட்டு வழிகளைக் கடப்பாள், கன்றுகளைப் பிரித்துக் கொண்டு வரப்பட்டபசுக்கள் நிறைந்த துன்பம் உறையும் மன்றங்களை உடைய கரந்தை மறர்வகளின் சிற்றூர்க்குத் தலைவி செல்லுவாள்.முதிய பெண்டிர் தனித்துறையும் குடிசையில் தலைவன் தோள் துணையாகவும் துயிலமாட்டாள். கள்வர்கள்காளைகளை பிடித்துக்கட்டும் பொருட்டுத் தட்டும் தண்ணுமை முழக்கம் கேட்டு அஞ்சுவாள் என எண்ணுகிறாள்.

உடன்போக்கில்தலைவியின்செயலினைச்செவிலிஎவ்வாறுஅறியஇயலும்தலைவிக்குஇப்படியெல்லாம்துன்பம்நிகழும்எனச்செவிலிதன்சிந்தனைப் போக்கில்கற்பனைகாணும்நிகழ்வுகள் பகற்கனவுஎனக்குறிப்பிடப்படுகின்றன.

**செவிலியின்அன்புள்ளம்**

குழந்தைகளை வளர்த்து அவர்களுக்குத் திருமணம் செய்துவைப்பது என்பது பெற்றோர்களின் பெரியகனவாகும். தன் பெண்ணை மணக்கோலத்தில் கண்டு மகிழக்கூடிய வாய்ப்பினை இழந்ததாயின் நிலைமை அகநானூற்றில் விவரிக்கப்படுகின்றன.

**“என்மகள் பெருமடம்யான் பாராட்ட**

… … … … … …

**மணன்இடையாகக்கொள்ளான்**”11 **அகம்**: 397 (1-4)

மகளின் திருமணம் அகன்ற வீட்டில் முழவின் ஓசை இடைவிடாது கேட்கும் திருவிழா போன்று நடக்கும் என்று தாயின் களவு கலைந்து போகும் வண்ணம் தலைவி, தலைவனுடன் சென்று

விட்டாள் என்று தாய் புலம்புகிறாள். இந்தாயின் உணர்வு உள்ளத்தை, சமுதாயத்மதிப்பிற்காக கண்டிப்புடன் வளர்ந்தாய் தலைவி உடன் போக்கு நிலையில் துன்பம் மேலோங்கிச் செவிலியின் மானவுணர்வை அடக்கி அன்பு நிலையை மேம்படுத்து கின்ற புலனுணர் வைப்பாடல்கள் புலப்படுத்துகின்றன.

**நனவுமனம்**

மெய்ப்பாடு சார்ந்த வெளிப்பாடுகள் நனவுமனத்தின் செயல்பாடுகளாக அமையும். நனவுமனம் குறித்து, "புற உலகத்திலிருந்து பெறப்பட்ட எண்ணங்கள், உருத்தோற்றங்கள், கருத்தாக்கங்கள், இன்ன பிற சிந்தனைகள் குடியிருக்கும் கொள்கலன்"12 (பிராய்டின் கலை இலக்கிய உளப்பகுப்பாய்வுப.14) என அரங்க நலங்கிள்ளி குறிப்பிடுகிறார்.

பரத்தையுடன் தலைவன் மகிழந்திருந்தான் என்ற செய்தி கேட்டதலைவி, பரத்தையைப்பற்றி கோபமாகப் பேசுகிறாள். தலைவியின் இக்கோபவார்த்தைகளைப் பொறுக்காத பரத்தைநனவு வெளிப்பாடுகளை வெளிப்படுத்துகிறாள். இதனை,

**"செய்யாம் ஆயினும் உய்யாமையின்**

**செறிதொடி தெளிர்ப்ப வீசிசிறிது வண்**

**உலமந்து**

**வருகம்சென்மோதோழி**"13 **அகம்:** 106 (7-9) என்ற அடிகளில் பரத்தை, தலைவன் நம்பால் தங்கியதால் அவன் மனைவி (தலைவி) தலைவனையும் தன்னையும் திட்டுவதாக கூறுகிறாள். அதைக் கேட்டதாம் ஏதொன்றும் செய்யவில்லை யென்றாலும், தலைவி வாழுகின்ற இருப்பிடத்தின் பக்கமாக வளையல் அணிந்தகைகளை வீசியவாறு 'உலாவிவருவோமா' என்கூறுகின்றாள்.

புறஉலகில்வெளிப்படையாகத்தலை விவைசபாடியதால்பரத்தைதலைவி யின்வீட்டின்பக்கம்கைகளைவீசிநடப் பேன்என்றுகூற்றுரைப்பதன்வாயிலா கப்புறஉலகசெயல்பாட்டினால்உரு வாகின்றபரத்தையின்மேல் (அல்லது) நனவுமன செயல்பாட்டினை அறியமுடிகின்றது.

**உணர்வொதுக்கம்**

மனம் விரும்பத்தகாத துன்பச்சூழலை மறுக்கவும் ஒடுக்கவும் உள்ளம் விழைகின்ற உணர்வு உணர்வொதுக்கம் எனப்படுகின்றது. பரத்தைமை ஒழுக்கத்தைக் கண்டித்து தலைவி, "தலைவன்மீது தான் பெரும்பாலும் குற்றம் சுமர்த்துகிறாள்"" என்பார் அமிர்தகெளரி. தலைவியின் இவ்வியல்பிற்கு முற்றிலும் மாறுபட்டவளாய் அகநானூற்று பரத்தை காணப்படுகிறாள்.

அழகு நலன் நுகர்ந்து வேறொருமலரை நாடும்வண்டு போல முன்னு கர்ந்த வளைமறந்து தலைவன் வேறொரு பரத்தையை நாடுகையில் பரத்தை கோபம் கொள்வது இயல்புநிலை. அகநானூற்று காதற்பரத்தை, முற்றிலும் மாறுபட்டுத் தலைவனிடம்,

**"நும்வியன்புலத்தல்செல்லேம்"**14 **அகம்:** 376 (13)

என்ற பாடல் அடிகளில் பரத்தை, கோபத்தை விலக்கி, தலைவனின் இயல்பினை உணர்ந்து, முன் பிருந்ததன் அழகு நலனைத்தந்து செல்வீராக என்று தன் இயல்பான கோபத்தினை ஒதுக்கி, உணர்வொதுக்கம் புரிகின்ற நிலைப்பாட்டினை உணர முடிகின்றது.

பரத்தையின் உளச் செயல் பாடுகள் அவளது மனநிலைப்பாடு அமைகின்ற விதத்தினைக் குறிப்பிடுகின்றன. அகநானூற்றில் தலைவனை பிரிந்த சூழலில் ஏற்படுகின்ற எண்ணங்கள் மட்டும் பரத்தை கூற்றுகளாக அமைந்துள்ளன.

**கண்டோர்கூற்று**

அகநானூற்றில் தலைவி உடன் போக்கு மேற்கொண்டநிலையில், தாயின் நிலைகண்டுக் கூறுவதாகக் கண்டோர் கூற்றுஉள்ளன.

**“ஆயமும் அணி இழந்து**

**அழுங்கின்று, தாயும்**

… … … … …

**அருமகளே" என**

**முயங்கினள்அழுமே.**”15 **அகம்:** 396 (12-15)

என்ற பாடல் அடிகளில், தாயின் நிலையைக் கண்டோர் குறிப்பிடுகின்றனர். அன்பாகப்பழகிய அவள் சென்றமைக்காக அவளுடைய தோழிகள் வருந்துகின்றனர். செவிலித்தாயின் துயரம் மிகுதியானது.

அவள்வீட்டுமுற்றத்தில், கருதுவார் இன்றிகிடந்த பொம்மையை எடுத்து குளிர்ந்த சூழலில் கிடத்தி, வாடிய குவளை மலரை அவற்றிற்குச் சூட்டி அருமைமகளைத் தழுவிக்கொள் என்று கூறி அழுகின்றாள்.

அவள் மனம் பித்தாகிவிட்டது என்று கண்டோர் கூறுகின்றனர். தலைவி உடன் போக்குச் சென்ற சூழலில் அவள் குடும்பநிலை கண்டு இரக்க உணர்வு உடையவர்களாகத் கண்டோர்

திகழ்வதைக் காண முடிகின்றது.

**உழையர்கூற்று**

உழையர் என்பவர்கள், தலைவன் சொல்கின்ற ஏவல் தொழிலைச் செய்யக் கூடியவர் அல்லது பக்கத்தில் இருப்பவர் என்ற பொருளில் இடம் பெறுகின்றன. தலைவியைப் பிரிந்த தலைவன் தன் வீடு புகுகின்ற நிலைமையினையும், அதனால் தலைவி அடைந்த மகிழ்ச்சியையும் தமக்குள் மகிழ்ந்து கூறுகின்றனர்.

**“வரைமருள் மார்பின்களிப்பனன் முயங்கி,**

**மனைக்கொண்டு புக்கனன், நெடுந்தகை,**

**விருந்து ஏர்பெற்றனள், திருந்திழையோளோ”**16 **அகம் :** 384 (13-15)

என்ற பாடல் அடிகளில் தலைவன் பாகனுடன் தன் வீட்டில் புகுந்ததால் சிறந்த விருந்தினைப் பேணும் சிறப்பினைப் தலைவி பெற்றாள் எனத் தலைவனின் மகிழ்வைக் கண்டும் தன் மகிழ்ச்சியை வெளிப் படுத்துகின்றனர். தன்னுடன் இருப்பவர்களின் மகிழ்ச்சியைக் கொண்டாடும் பண்பு நிறைந்தவர்களாக காணப்படுகின்றனர் என்பதை அறிய

முடிகின்றது. உழையர்கள் கண்டோர், உழையர், கூற்றுகளில் தொல்காப்பியர் சுட்டுகின்ற இரக்கம், அன்பு, மகிழ்ச்சி போன்ற உணர்வு நிலை பெறுகின்றன என்பதை அறிய முடிகின்றது. பாணன் கூற்று தலைவன் வரவைத்தலைவிக்கு உனார்த்தி ஆறுதல் சொல்லும் விதமாக அகநானூற்றில் அமைந்துள்ளன.

**முடிவுரை**

துணைமாந்தர்கள், தலைமாந்தர்களோடுகூற்றுநிகழ்த்துகின்றமரபுஅடிப்படையில், தொடர்புடையோர்இடமளிக்கின்றனர். தலைமக்களுடன்உறவுடையோர், எனஇருவகையாகப்பகுத்துஆராய

தலைவியைப்பெற்றெடுத்ததாய்நற்றாய்எனக்கூறப்படுகிறாள். அகநானூற்றில்தலைவிஉடன்போக்குசென்றநிலையில்நற்றாயின்மனஉணர்வுகள், பிறழ்வுநிலைக்குஉள்ளாகின்றன. அவளதுமனம்உளமுறிவு, உளஇறுக்கம்போன்றஉளநலச்சிக்கல்களுக்குஆளாவதனைஅறியமுடிகின்றது.

தலைவியைவளர்ப்பவள்செவிலிஎனக்கூறப்படுகிறாள். இலக்கியங்களில்நற்றாயினைவிடஅதிகளவிலானகூற்றுகளைச்செவிலி பெற்றிருப்பதால்அகஇலக்கியத்தில் அவளின்முக்கியத்துவத்தினைஉணர முடிகின்றது. செவிலிதலைவியைவளர்த்தவளாக இருப்பினும்உணர்வுவெளியீட்டில்நற்றாயின்மனஉணர்வுகளைப்பிரதிபலிப்பவளாகக்காணப்படுகின்றாள்.

பகற்கனவுகாணுதல், அஃறிணைஉயிரினங்களோடுஉரையாடுதல்போன்றதற்காப்புசெயல்களில்ஈடுபட்டுசெவிலிதன்னைத்துன்பநிலையிலிருந்துமீட்டெடுக்கிறாள்என்பதைஅறியமுடிகின்றது.

தலைமக்களுடன்தொடர்புடையவளாகக்கண்டோர், உழையர், பாணன்ஆகியமூவர்மட்டும்அகநானூற்றில்இடம்பெறுகின்றனர்.

## பார்வைநூல்


சுப்பிரமணியன்ச. வே : சங்கஇலக்கியம்தொகுதி – இரண்டு

அகநானூறுமூலமும்உரையும்

(2004) பதிப்பு – 2004

மணிவாசகர்பதிப்பகம்,

சென்னை – 98

கந்தசாமி. சோ.ந : கந்தசாமி. சோ.ந, குறுந்தொகைத்திறனாய்வு

(1977) பதிப்பு – 1977

கற்பகம்வெளியீடு

சிதம்பரம்

சண்முகம்பிள்ளை. ம : சங்கத்தமிழர்வாழ்வியல்

(1982) பதிப்பு – 1982

கழகவெளியீடு

சென்னை – 17

சுப்புரெட்டியார். ந : தொல்காப்பியம்காட்டும்வாழ்க்கை

(1964) பதிப்பு – 1964

பழனியப்பாபிரதர்ஸ்

சென்னை

விஜியலட்சுமி .வீ :
அறஇலக்கியங்களில்இல்லறம்

2021 பதிப்பு – 2021

சித்ராபதிப்பகம்

சென்னை – 24